**தலைப்பு 216 - சமூக சேவைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன சமூக சேவைகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

தலைப்பு 216 - சமூக சேவைகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி திணைக்களத்தின் பதிவாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சமூக சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை.<br>2. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள் | 2.7<br>2.1.1 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் | வருடாந்த பொருள் மெய்மையாய்வுகளை நடாத்துதல் | 2.2 (ஆ) |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை. | | |
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு வருமதியான பணத்தை சேகரிப்பதில் செயன் முன்னேற்றத்தைக் காட்டு அறிக்கை நாளாந்தம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்புதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் | 2.6 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

கொட்டாவ சிறுவர்கள் மதியுரை நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 25 மில்லியனான மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் 2017 சனவரி மாதத்தின் போது உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அந்த நிர்மாணங்கள் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்தது. எவ்வாறெனினும் இதற்காக ரூபா 16 மில்லியன் நிர்மாணப் பணிகளுக்காக கட்டிடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஒக்தோபர் 18 ஆந் திகதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சுவீகரிக்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 08 தொழில்பயிற்சி நிலையங்களின் கூட்டுத்தொகை 22 ஹெக்டேயார்கள் காணியானது 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளல்**

2017 ஆம் ஆண்டிற்குரியதாக மதிப்பாய்வு சபையின் அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலும் தொழில்பயிற்சி நிறுவனமொன்றினதும் பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட 16 விடயங்களின் 38 அலகுகளின் மிகைகள் மற்றும் 16 பொருள் உருப்படிகளின் 289 அலகுகளின் பற்றாக்குறையொன்று தொடர்பில் நிதிப்பிரமாணம் 102 மற்றும் 108 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கிணங்காத வகையில் 19 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 384.18 மில்லியனான தேறிய நிதியேற்பாடு ரூபா 4.79 மில்லியனால் மிகைத்து ரூபா 7.05 மில்லியனான கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

**2.4 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011 மார்ச் 10 ஆந் திகதி பதவிகளை அங்கீகரிக்கும் போது கீழமைந்த பதிவிகளுக்கான நிலையப்பொறுப்பு உத்தியோகத்தர் பதவிகளினூடாக கடமைகள் நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், சமூக சேவைகள் திணைக்களத்தினால் இரத்துச் செய்யப்பட்ட பதவிகளில் பதிற்கடமைகளுக்காக இரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு படிகளாக 2011 மார்ச் மாதம் முதல் 2017 பெப்ரவரி மாதம் வரையிலும் ரூபா 441,766 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) சேவையில் ஈடுபட்டுள்ள போது மரணமடைந்த 6 உத்தியோகத்தர்களில் வயது குறைந்த சிறுவர்களுக்குரிய ரூபா 186,491 தொகையான சேமிப்பு வைப்புப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவர்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 02 வருட காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2016** | மீண்டுவருபவை | 446.33 | 434.92 | 11.40 | 2.56 |
| | மூலதனம் | 50.10 | 48.89 | 1.21 | 2.42 |
| | **மொத்தம்** | **496.43** | **483.82** | **12.61** | **2.54** |
| **2017** | மீண்டுவருபவை | 520.72 | 483.92 | 36.82 | 7.06 |
| | மூலதனம் | 180.31 | 101.66 | 78.63 | 43.61 |
| | **மொத்தம்** | **701.03** | **585.58** | **115.45** | **16.47** |

**ஒதுக்கீட்டு கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(ஆ) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

42 செலவின விடயங்களுக்காக ரூபா 285.40 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 212.14 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(இ) நிதியேற்பாடுகளை மிகைத்து பொறுப்புகளை ஏற்படுத்தல்**

சுய தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்களின் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு ரூபா 25 மில்லியனான குறைநிரப்பு நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 22.59 மில்லியன் அல்லது 90 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21601 ஆம் இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **20.00** | **19.07** | **15.00** | **15.17** | **95.00** | **53.36** |

**நிலுவைக் கடன் மீதிகளை அறவிடாமை**

கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் நீங்கலாக ரூபா 574,813 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 11 வருடங்களான காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடும் பின்தொடர் பணிகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டன.

**2.7 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தினால் பின்வரும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| (அ) பொருட் பதிவேட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 751 |
| (ஆ) கிடைக்கும் காசோலைகள், காசு | நிதிப்பிரமாணம் 451 |

கட்டளைகள் பதிவேடு

(இ) அடியிதழ் சேர் பதிவேடு நிதிப்பிரமாணம் 341

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்தின் பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 334.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய தனிநபருக்கான செலவினம் ரூபா 473,518 ஆக இருந்தது.

| **ஆளணி வகை** | | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 10 | 07 | 03 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 117 | 110 | 07 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 521 | 471 | 50 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 116 | 108 | 08 |
| (v) | அமைய / ஒப்பந்தம் | 18 | 11 | 07 |
| | **மொத்தம்** | 782 | 707 | 75 |

2015 ஏப்ரல் 02 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்களத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் ஒருவர் வயோதிபர்களுக்கான செயலகத்தில் சேவையாற்றியிருந்ததுடன், அந்த உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 507,310 மொத்த சம்பள அளவினை மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.